Pamban-Rameswaram Link Road.

* 19. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the proposals for the Pamban-Rameswaram Link Road Project have been approved by the Central Government and

(*b*) if so, the details thereof?

பாம்பன்-இராமேஸ்வர இணைப்புச் சாலை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பாம்பன்-இராமேஸ்வர இணைப்புச் சாலை திட்டத்திற்கான செயற் குறிப்புகளுக்கு மத்திய அரசு ஏற்பளித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இப்பணிக்குரிய ரூ. 532.87 லட்சம் மதிப்பீட்டு பட்டியலுக்கு மத்திய அரசு தனது ஒப்புதலை அளித்துள்ளது. பாலம் அமைப்பதற்கு ரூபாய் 481.86 லட்சமும், இணைப்புச் சாலைப்பணிக்கு ரூ. 51.01 லட்சமும் மதிப்பிடப் பட்டிருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, இந்த வேலை எப்போது துவங்கும், எப்போது முடிவடையும் என்று தெரிந்துகொள்ள முடியுமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Government of India have recently in March 1972 accorded financial sanction and technical approval to the estimate for Rs. 532.87 lakhs for the above work. The cost of bridge alone works out to Rs. 481.86 lakhs and the cost of the approach road works out to Rs. 51.01 lakhs. The Chief Engineer, National Highways has reported that tenders on all-India basis will have to be called for for the work and that it will take 6 months to finalise and settle the tenders. After the settlement of tenders, it will take about 3 years to complete the work.

Overbridge in North Coimbatore.

* 20 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to construct an overbridge in North Coimbatore as the railway gate is often closed and consequently traffic is blocked; and

(*b*) if so, the details thereof?